20.02.2025

O.S.No.226/2013

பி.வா.சா.1.திரு. பரமேஷ்வரன் த.பெ. தங்கவேல்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ 5 கிரைய ஆவணத்தில் சாட்சி கையெப்பம் இட்டவர்கள் யார் யார் என்றும் இன்னார் என்று நிருபித்தவர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் ஞாபகமில்லை. எனது சாட்சியங்களை என் தரப்பு சாட்சிகள் யார் என்று விசாரிக்க முடியுமா என்றால் அந்த சாட்சிகளை கேட்டாதால் தான் தெரியும் என சாட்சி கூறுகிறார். அந்த சாட்சிகள் இருவரும் எனக்கு வேண்டியவர்கள் என்றால் சரியல்ல. அந்த சாட்சிகளுக்கு வா.சா.ஆ 5 ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்றும் யார் எழுதி கொடுத்தது என்றும் எழுதி கொடுத்தவர்கள் அடையாளம் உட்பட எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. அந்த சாட்சிகள் இருவரும் பத்திர அலுவலகத்திலேயே இருந்து ரூபாய். 100 யார் கொடுத்தாலும் கையெப்பம் இடகூடிய நபர்கள் என்பதால் அவர்களை தெரியாது என நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க நன்கு தெரியும் என்றாலும் 1, 2 வாதிகளை ஏமாற்றி கிரையம் பதிவு செய்ததால் தற்சமயம் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணம் பதியும்போது சார்பதிவாளர் எவ்வித ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர் பவர் பத்திரம், பட்டா, உயில் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார். வா.சா.ஆ 5 ஆவணத்தில் அசல் பொது அதிகாரம் பத்திரம் என்வசம் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த பத்திரத்தை என்னிடம் கொடுக்கவில்லை.

2. வா.சா.ஆ 5 ஆவணம் பதிவு செய்யப்பட்டபோது அசல் பவர் பத்திரத்தை சார் பதிவாளரிடம் காட்டியதாக நான் சொல்லியுள்ளதால் அவ்வாறு சார்பதிவாளர் அந்த பவர் பத்திரத்தை பார்வையிட்டார் என்பதற்கான மேல் எழுத்து கையெப்பம் அந்த பவர் பத்திரத்தில் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. உண்மையிலேயே பவர் பத்திரத்தை வா.சா.ஆ 5 ஆவணத்தை பதிவு செய்யும்போது சார்பதிவாளரிடம் காண்பிக்கவும் இல்லை அதை அவர் பார்வையிட்டு மேல் எழுத்து கையெப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அசல் பொது அதிகார ஆவணத்தை பார்க்காமல் பெருந்தொகையை கையூட்டாக பெற்று கொண்டு வா.சா.ஆ 5 ஆவணத்தை மோசடியாக பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. அசல் பொது அதிகார ஆவணம் வாதிகளின் கையில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த அசல் பொது அதிகார ஆவணத்தை வாதிகள் தரப்பு சான்ற ஆவணம் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறினார். பின்பு வா.சா.ஆ 4 ஆவணத்தை காட்டி கேட்டபோதும் தனக்கு சத்தியமாக படிக்க தெரியாது என சாட்சி கூறுகிறார். நான், சார்பதிவாளர், பத்திர எழுத்தர், சாட்சிகள் கூட்டு சேர்ந்து மோசடியாக 1, 2 வாதிகளை ஏமாற்றி பத்திரம் பதிந்து கொண்டோம் என்று மாவட்ட குற்றப்பிரிவில் குற்ற எண்.33/2011 ல் 23.06.2011 ம் தேதி

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து C.C.No.190/2013 வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 மதுரையில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் மேலூர் சார்பு நீதிமன்றம் O.S.No.618/2012 வழக்கு தொடுத்தாக சொல்லியிருப்பதால் அது தற்போது நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. அது சம்மந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கின் வழக்குரையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். O.S.No.618/2012 வழக்கின் பிராது நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் எனக்கு படிக்க தெரியாது என்பதால் அதைபற்றி தெரியாது என சாட்சி கூறுகிறார்.

3. O.S.No.618/2012 வழக்கு 16.09.2016 ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக சொல்லப்படும் வழக்கு விபரம் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் நான் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்ட பின்பு O.S.No.618/2012 வழக்கில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**